பக்கங்கள் 12+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | தை 09 செவ்வாய்க்கிழமை 21.01.2025 | அதிர்வு 173

## அர்ச்சுனா எம்.பியை கைது செய்ய உத்தரவு



யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் அர்ச்சுனா இராமநாதனைக் கைது செய்யுமாறு 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# சுமந்திரனை விசாரியுங்கள்

## சபையில் சிறீதரன் எம்.பி. வலியுறுத்து

CLICK HERE VIDEO

(ந.லோகதயாளன்)

அரச பேச்சாளர் அல்லது புலனாய்வுப் பிரிவின் பேச்சாளர் போன்று ஊகத்தின் அடிப்படையில் என் தொடர்பில் கருத்துரைத்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் எனத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் இன்றைய தினம் ஓர் சிறப்புரிமை மீறல் தொடர்பில் 02

## கைதடி தோட்டக் கிணற்றில் இருந்து சிசுவின் சடலம் மீட்பு!

(எஸ்.ரகுதீஸ்)

யாழ்ப்பாணத்தில் தோட்டக் கிணறு ஒன்றில் இருந்து தொப்புள் கொடியுடன் சிசுவின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கைதடி பகுதியில் உள்ள தோட்டக் கிணறு ஒன்றில் இருந்து இன்று செவ்வாய்க்கிழமை காலை இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

தோட்டத்துக்குச் சென்ற விவசாயிகள் கிணற்றினுள் சிசு ஒன்றின் சடலம் மிதப்பதாகச் சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவித்தனர். இதையடுத்துச் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், சடலத்தை மீட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# வல்வெட்டித்துறையில் கரையொதுங்கிய மிதவை





(எஸ்.ரகுதீஸ் )

யாழ்., வடமராட்சி, வல்வெட்டித்துறை – ஆதிகோவிலடி கடற்கரையில் பாரிய மிதவை கரையொதுங்கியுள்ளது.

கடலில் நிலவும் கடும் காற்றால் குறித்த மிதவை கரையொதுங்கியிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கரையொதுங்கிய மிதவையைப் பொதுமக்கள் எனப் பலர் பார்வையிட்டு வருகின்றனர்.

இதேபோன்ற மிதவைகள் அண்மையில் வடமராட்சி கிழக்கில் மருதங்கேணி, கட்டைக்காடு, சுண்டிக்குளம் போன்ற பகுதிகளில் கரையொதுங்கியிருந்தன.

அண்மைக்காலமாக வடமராட்சி கரையோரங்களில் மிதக்கும் கூடாரங்கள், மிதவைகள் போன்றன கரையொதுங்கியமை குறிப்பிடத்தக்கது.

# மின்சார வேலியில் சிக்கி ஒருவர் சாவு!

கண்டியில் மின்சார வேலியில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கண்டி, கடுகண்ணாவை பிரதேசத்தைச் சேர்ந்த 62 வயதுடைய குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் கொட்டகேதெனிய பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றுக்கு நேற்று சென்றபோது காணியைச் சுற்றி சட்டவிரோதமாகப் பொருத்தப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தவுலகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### அர்ச்சுனா எம்.பியை...

அநுராதபுரம் நீதிமன்றம் இன்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது, அர்ச்சுனா எம்.பி. நேற்று இரவு அநுராதபுரம் ரம்பேவ பகுதியில் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் விளக்குகளை ஒளிரச் செய்து தனது வாகனத்தை ஓட்டிச் சென்றுள்ளார்.

இதன்போது,போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகள் சிலர் அர்ச்சுனாவின் வாகனத்தை நிறுத்தி அவரது தேசிய அடையாள அட்டை மற்றும் சாரதி அனுமதிப் பத்திரத்தைக் கோரியுள்ளனர்.

பின்னர், அர்ச்சுனா எம்.பி. ஆவணங்களை வழங்க மறுத்து, பொலிஸ் அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

இதனையடுத்து, போக்குவரத்துச் சட்டங்கள் மற்றும் குற்றவியல் நடைமுறைகளின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா எம்.பிக்கு எதிராக நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில், அர்ச்சுனா எம்.பியைக் கைது செய்யுமாறு அநுராதபுரம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

### சுமந்திரனை விசாரியுங்கள்...

உரையாற்றும்போதே சிறீதரன் எம்.பி. இதனைக் கோரினார்.

இதன்போது அவர்,

“2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் சென்னையில் தமிழ்நாடு அரசின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்விற்கு உத்தியோக பூர்வமாக அழைக்கப்பட்டேன். அதற்காக 10 ஆம் திகதி மாலை 6.45 இற்கு கட்டுநாயக்கா விமான நிரையத்தில் இருந்து பயணித்த விமானத்தில் பயணிப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பயணிக்கும் பகுதியூடாக நான் பயணித்த சமயம் விமான நிலைய அதிகாரிகள் பயங்கரவாத தடைப் பிரிவினரின் விசாரணை கோரப்பட்டுள்ளது. அதனால் உங்கள் கடவுச் சீட்டில் தடை உள்ளது எனத் தெரிவித்து வேண்டுமென்றே தடுத்தனர். இதன்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூவ் ஹக்கீம் தலையிட்டு கதைத்ததன் பெயரில் இறுதி நேரத்தில் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டேன். இருந்தபோதும் 12ஆம் திகதி மாலை நாடு திரும்பியபோது எனது கடவுச் சீட்டில் தடை இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அது என்ன தடை எனக் கோரிய போது எந்தவொரு தடையும் இல்லை எனப் பதிலளித்தனர்.

இதேநேரம் யாழ்ப்பாணத்தில் ஓர் ஊடக நிறுவனத்தின் நிகழ்ச்சியில் பங்கு கொண்டிருந்த நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கனடாவில் உள்ள தடை செய்யப்பட்ட அமைப்பின் அழைப்பின் பெயரில் சென்றதனால் அந்தத் தடை ஏற்படுத்தப்பட்டிருக்கலாம் என ஓர் பத்திரிகையில் செய்தி வெளியானது எனத் தெரிவித்திருந்தார். எனவே, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரை விசாரித்தால் அது எந்தப் பத்திரிகை எனத் தெரியவரும் அந்த ஊடகத்தின் முதலாளியை விசாரிக்கும்போது இதன் உண்மைத் தன்மை கண்டறியப்படும்.

இதேநேரம் நாடாளுமன்ற உறுப்பினரின் நண்பரும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான அஸ்மின் விமான நிலையத்தில் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் தடுக்கப்படவில்லை என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக முகநூலில் பதிவு செய்துவிட்டு தமிழ்நாடு அரசியல் கட்சி ஒன்றின் தலைவரான சீமானுடன் நான் நின்ற புகைப்படத்தையும் இணைத்துள்ளார்.

இதேநேரம் கடந்த இரு ஆண்டுகளாக எனது பாதுகாப்புப் பணியில் இருந்த ஒரு பாதுகாப்பு உத்தியோகத்தர் எந்தவொரு முன் அறிவித்தலும் இன்றி நீக்கப்பட்டுள்ளார். அது தொடர்பில் நான் பொலிஸ்மா அதிபரிடம் முறையிட்டும் நடவடிக்கை இல்லை.

எனவே, இவை தொடர்பில் உரிய விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்பதோடு அதற்கு அரச பேச்சாளர் அல்லது புலனாய்வுப் பிரிவின் பேச்சாளர் போன்று ஊகத்தின் அடிப்படையில் என் தொடர்பில் கருத்துரைத்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்.”

– என்றார்.



# அம்பியுலன்ஸ் - கெப்ரக வாகனம் விபத்தில் இரண்டு பேர் படுகாயம்!

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை – மட்டக்களப்பு பிரதான வீதியின் மூதூர் பொலிஸ் பிரிவிலுள்ள பாலத்தோப்பூர் பகுதியில் அம்பியுலன்ஸ் வாகனமும், கெப்ரக வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் அம்பியுலன்ஸ் வாய்க்காலுக்குள் தடம் புரண்டுள்ளது.

இதனால் அம்பியுலன்ஸில் வந்த இருவர் காயமடைந்துள்ளனர்.

இன்று செவ்வாய்கிழமை (21) பகல் இடம்பெற்ற இந்த விபத்துச் சம்பவத்தில் கிளிவெட்டி பிரதேச வைத்தியசாலையின் அம்பியுலன்ஸ் சாரதியும் மற்றுமொரு வைத்தியசாலை ஊழியரும் படுகாய மடைந்து கிளிவெட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மூதூர் தள வைத்தியசாலையில் நோயாளிகளை இறக்கிய பின்னர் கிளிவெட்டி பிரதேச வைத்தியசாலையை நோக்கி வரும் வழியிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணை களை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வடிவேலு பாணியில் அரசு

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் நடைமுறையாக்கம் தொடர்பில் அமைச்சரும் சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்கா நாடாளுமன்றத்தில் இன்று காலை கூறிய கருத்துக்கள் நகைச்சுவை நடிகர் வடிவேலுவின் ஒரு கொமடிக் கதையை நினைவூட்டுவனவாக அமைந்திருந்தன.

வடிவேலுவுக்குக் கடன் கொடுத்தவர் பணத்தை அறவிடத் துடிப்பார்.

''பணத்தை எப்போதுடா தருவாய்?'' - என்று அவர் பாய்வார்.

''பணம் வரும் போது தருவம்'' - என்பார் வடிவேலு.

''எப்போது வரும்?'' - என்று கடன் கொடுத்தவர் மீண்டும் துள்ளுவார்.

''தரும்போது வரும்!'' - என்று வடிவேலு சாவகாசமாக பதில் தருவார்.

அதுபோல இருக்கின்றது பயங்கரவாத தடைச் சட்ட நீக்கம் தொடர்பில் இந்த அரசினதும் நிலைப்பாடு.

மிக மோசமான - காட்டுமிராண்டித்தனமான - மனிதாபிமான முறைமைகளுக்கே முரணான - இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் கடந்த 47 ஆண்டுகளாக இலங்கையில் தொடர்ந்து நீடிக்கின்றது.

இது மனிதாபிமான முறைமைகளுக்கு மாறான கொடூரச் சட்டம் என்பதை இலங்கையின் முன்னைய அரசுகளும் கூட ஒப்புக் கொண்டிருக்கின்றன. உள்நாட்டில் மட்டுமல்லாமல், சர்வதேச அரங்குகளில் நடந்த பல்வேறு உயர்நிலை மாநாடுகளில் கூட இந்த விடயத்தை இலங்கை அரசுகள் ஒப்புக் கொண்டு, அதனை நீக்குவதாக வாக்குறுதியளித்திருக்கின்றன.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்று அந்த அரசுகள் ஒப்புக்கொண்டாலும் அது இன்னும் நீக்கப்படவில்லை. வடிவேலு வாங்கிய கடன் மீளச் செலுத்தாத மாதிரி, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதாகக் கூறிய இலங்கை அரசு அதை இன்னும் செய்யவில்லை.

இப்போது அதிகாரத்துக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தி கூட, தான் ஆட்சி அதிகாரத்துக்கு வரும் வரை இந்தச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்று துடியாய் துடித்தது. இப்போது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியதும் வடிவேலு பாணியில் அது பதில் அளிக்கின்றது.


நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்காக, அதற்கு மாற்றீடாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டு வரப்படும் என்று கூறப்பட்டாலும் அது நடைபெறுவதாக இல்லை.

கடன் பணத்தை மீளச் செலுத்துவது தொடர்பில் வடிவேலு பதில் தருவது மாதிரி, 'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் புதிதாக வரும்போது பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும்' என்று இன்று நாடாளுமன்றத்தில் திரும்பவும் கூறுகின்றார் அமைச்சர்.

'சரி, அந்தப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் எப்போதும் வரும்?' என்று இனிக் கேட்டால் 'பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும்போது அது வரும்' என்று அவர் பதில் சொல்வார் என்பது தெளிவாகின்றது.

இருக்கும் சட்டத்தை எப்போது நீக்குவோம், புதிய சட்டம் எப்போது வரும் என்று திட்டவட்டமாக வரையறை செய்து பதில் கூறாமல், 'வரும்போது நீக்குவோம், நீக்கும் போது வரும்' என்று நாடகமாடிக் கொண்டிருக்கின்றன மாறி மாறி அதிகாரத்துக்கு வருகின்ற அரசுகள்.

இந்த விடயத்தில் இலங்கையில் ஆட்சி பீடத்துக்கு வரும் அரசுகள் எல்லாமுமே வடிவேலு பாணியில் பதில் சொல்லி மக்களை முட்டாளாக்கிக் கொண்டிருக்கின்றன என்பதுதான் வேதனையிலும் வேதனை...!


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA





# உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான புதிய விற்பனைக் கூடம் யாழ். நகரில்

வடக்கு மாகாண தொழிற்துறைத் திணைக்களத்தின் ஆலோசனையுடன், யாழ்ப்பாண முயற்சியாளர் சங்கத்தால் நடாத்தப்படும் 'பஞ்சவர்ணம்' உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான புதிய விற்பனைக் கூடம் யாழ். நகரப் பகுதியில் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்துக்கு எதிரில் நேற்று திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.



பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் விற்பனைக் கூடத்தை திறந்து வைத்து உரையாற்றுகையில்,

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களைச் சந்தைப்படுத்துவதில் பிரச்சினை இருக்கின்றது. உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருள்களைப் பொதுவான இடத்தில் காட்சிப்படுத்தவும் சந்தைப்படுத்தவும் வாய்ப்புக்களைக் கோரியிருந்தார்கள்.

தற்போது திறக்கப்பட்டுள்ள இந்த இடத்தில்தான் நான் மாவட்டச் செயலராக இருந்தபோதும் விற்பனைக் கூடத்தை திறப்பதற்கு திட்டமிட்டிருந்தேன். அது அப்போது சாத் தியப்பட்டிருக்கவில்லை. இப்போது சாத்தியமாகியுள்ளது. தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்தா லும் நிரந்தரமான கட்டடத்தை இந்த ஆண்டு இறுதிக்குள் அமைக்க முடியும் என நம்புகின்றேன்.

எமது சிறு கைத்தொழில் முயற்சியாளர்களின் பொருள்களை மக்கள் கொள்வனவு செய்வதை ஊக்குவிக்கும் வகையில் விளம்பரப்படுத்தவேண்டும். வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் இவ்வாறான விற்பனை நிலையங்கள் உருவாக்கப்பட வேண்டும். இந்த முயற்சியில் ஈடுபடும் அனைத்து முயற்சியாளர்களையும் வாழ்த்துகின்றேன். இதை சிறப்பாக இயக்குவதன் மூலமே உங்களுக்கு தொடர்ச்சியாக உதவிகளை வழங்கவேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கும் ஏற்படும். – என்றார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் செயலர் பொ.வாகீசன், வடக்கு மாகாண தொழிற்துறை திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி செ.வனஜா, யாழ். அரச அதிபர் ம.பிரதீபன் ஆகியோரும் துறைசார் திணைக்கள அதிகாரிகளும் பங்கேற்றனர்.

வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் விற்பனைக்கூடம் காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணி வரையில் திறந்திருக்கும்.

உள்ளூர் உற்பத்தியாளர்களின் பனைசார் உற்பத்திகள், உள்ளூர் சிற்றுண்டிகள், ஆயுள்வேத மூலிகைப் பொருள்கள், கைவினைப் பொருள்கள், மிளகாய் தூள், சரக்குத் தூள் உள்ளிட்ட பல வகையான பொருள்கள் விற்பனைக் கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.







# அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளராக அஸீம்!

(அபு அலா )

அம்பாறை மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராக நியமிக்கப்பட்ட மருதமுனையைச் சேர்ந்த எஸ்.எல்.ஏ.எஸ்.அஸீம் இன்று (21) தனது கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

அம்பாறை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராகக் கடமையாற்றி வந்த கமல் நெத்மினி ஜனாதிபதி செயலகத்துக்கு இடமாற்றம் பெற்றுச்சென்றதால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு கல்முனை மாநாகர சபையின் பிரதி ஆணையாளராக கடமையாற்றி வந்த அஸீம் நியமிக்கப்பட்டார்.

நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் ஆணையாளர் ஏ.டி.எம்.ராபி, அக்கரைப்பற்று மாநகர சபையின் ஆணையாளர் என்.எம்.நௌபீஸ் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# அரச உத்தியோகத்தர்களுக்கு ‘கிளீன் ஸ்ரீலங்கா’ தெளிவூட்டல்!

(சர்ஜுன் லாபீர்)

புதிய அரசால் நாடளாவிய ரீதியில் முன்னெடுத்து நடைமுறைப்படுத்தப் பட்டுவரும் “கிளீன் ஸ்ரீ லங்கா” வேலைத் திட்டம் சுற்றாடல் மற்றும் சமூக மாற்றம் ஒன்றை ஏற்படுத்தி நாட்டின் தரப்படுத்தல் நோக்கங்களை முதன்மையாக கொண்டு “அழகான நாடு புன்னகைக்கும் மக்கள்” எனும் தொனிப்பொருளில் அதி மேதகு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த வேலைத்திட்டம் தொடர்பாக சம்மாந்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு தெளிவூட்டும் நிகழ்வு இன்று (21) சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பிரதான மூன்று விடயங்களான சமூக அடிப்படை, சுற்றாடல் அடிப்டை மற்றும் நெறிமுறை அடிப்படையிலான விடயங்கள் தொடர்பான தெளிவூட்டல்கள் இதன்போது வழங்கப்பட்டது.



இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் யூ.எம்.அஸ்லம், கணக்காளர் எஸ்.எல்.சர்தார் மிர்ஸா, நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம்.ஜெமீல், மேலதிக மாவட்ட பதிவாளர் ஏ.கே.ரினோஸா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திருடிய மாட்டை வெட்டியவர் இறைச்சியுடன் கைதானார்!

(சம்மாந்துறை
தில்சாத் பர்வீஸ்)

திருடிய மாட்டை இறைச்சியாக வெட்டும் போதே சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்தோடு மாட்டை வெட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களையும் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவு அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

இச்சம்பவம் இன்று (21) செவ்வாய்க் கிழமை அதிகாலையில் நடைபெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வளத்தாப்பிட்டி பகுதியில் மாட்டிறைச்சியுடன் இன்று (21) செவ்வாய்க்கிழமை அதிகாலை வேளையில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவு அதிகாரிகளால் இந்தச் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வளத்தாப்பிட்டி பிரதேசத்தில் மேய்ச்சலுக்கு சென்ற ஏழு மாதத்துக்கு உட்பட்ட கன்று இரவு வேளையாகியும் வீடுவரவில்லை என்று பொலிஸ் நிலையத்தில் இன்று செவ்வாய்க்கிழமை (21) அதிகாலை வேளையில் மாட்டு உரிமையாளர் முறைப்பாடு செய்திருந்தார் என்று சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் தொடர்பான தேடுதலை மேற்கொண்ட பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேகநபரின் வீட்டைச் சோதனை செய்த போது வீட்டு அறை ஒன்றினுள் வைத்து மாட்டை அறுத்து இறைச்சியாக்கியுள்ளனர்.

இந்த நிலையில் மாட்டிறைச்சியுடன் 32 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடம் இருந்து 47 கிலோ 600 கிராம் மாட்டி



றைச்சி மீட்கப்பட்டது. சந்தேக நபர் சட்ட நடவடிக்கைகளுக்காகச் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம்.நௌபரின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான சார்ஜன் டபிள்யூ.ஏ சரத், சார்ஜன் ஜி.எம். உபாலி பொலிஸ் உத்தியோகத்தர்களான எம். நிரஞ்சன், ஜிஹான், கிருசாந்தன் உள்ளிட்ட குழுவினர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.






# சுகாதாரத்துறைக்கு ஆற்றிய சேவைகளுக்குப் பாராட்டு

(ஏ.எல்.றியாஸ்)

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையின் நலன்புரிச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரியாவிடை நிகழ்வும் வருடாந்த ஒன்றுகூடலும் ஞாயிற்றுக் கிழமை வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றன.

வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் சனூஸ் காரியப்பர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் பிரதம அதிதியாகவும், பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், பிராந்திய சுகாதார தகவல் முகாமைத்துவ பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஐ.எம்.முஜிப், பிராந்திய தொற்றா நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஐ.எம்.எஸ்.இர்ஷாத் ஆகியோர் கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டனர்.

சாய்ந்தமருது வைத்தியசாலையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் இந்த நிகழ்வின் போது பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் குறித்த வைத்தியசாலையில் பணியாற்றி அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்கின்றவர்களும் இதன் போது கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் பாடசாலைகளில் தங்கள் எது திறமைகளை வெளிப்படுத்திய வைத்தியசாலை நலன்புரிச் சங்க உறுப்பினர்களுடைய பிள்ளைகளும் இந்த நிகழ்வின் போது அதிதிகளினால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட கலை, கலாசார நிகழ்வுக ளும் இங்கு இடம்பெற்றன.










# மருதமுனையின் முதலாவது நீதிபதியின் சேவையை பாராட்டி கௌரவிக்கும் விழா

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

நீதிச்சேவையில் 34 ஆண்டுகள் கடமையாற்றி ஓய்வு பெற்று செல்லும் மருதமுனையின் முதலாவது நீதிபதி ரி.எல்.அப்துல் மனாப்பின் சேவையைப் பாராட்டி மருதமுனை சட்டத்தரணிகள் சங்கம் ஏற்பாடு செய்த கௌரவிப்பு விழா, சிரேஷ்ட சட்டத்தரணியும் கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவருமான எம்.ஐ.றைசுல் ஹாதி தலைமையில் மருதமுனையில் நடைபெற்றது.

1963 ஆம் ஆண்டு மருதமுனையில் பிறந்த ரி.எல்.அப்துல் மனாப் 1983 ஆம் ஆண்டு கொழும்பு சட்ட பீடத்துக்குத் தெரிவானார். பின்னர் 1991 ஆம் ஆண்டு சட்டத்தரணியாக நியமனம் பெற்றுக் கொண்ட இவர் 2000 ஆண்டு நடைபெற்ற போட்டி பரீட்சையில் சித்தி பெற்று நீதிவானாக நியமனம் பெற்றார்.


இவர் கொழும்பு, திருகோணமலை, மூதூர், ஆகிய இடங்களில் நீதிவானாகவும் அக்கரைப்பற்று, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் வவுனியா ஆகிய இடங்களில் மாவட்ட நீதிபதியாகவும் கடமையாற்றியுள்ளார். 2017 ஆம் ஆண்டு மேல் நீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு பெற்ற இவர் மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதியாகவும் யாழ்ப்பாணத்தில் அமரும் வட மாகாணத்துக்கான குடியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாகவும் கடமையாற்றிக் கடந்த டிசெம்பர் மாதம் 24 ஆம் தேதி ஓய்வு பெற்றார். இவர் மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி, அல்-மனார் மத்திய கல்லூரி, மட்டக்களப்பு சிவானந்தா வித்யாலயம் ஆகியவற்றின் பழைய மாணவர் ஆவார்.

நீதித்துறைக்கு இவர் ஆற்றிய சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கும் இந்த விழாவில் கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ஜயராம் ட்ரொஸ்கி, அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற நீதவான் ஏ.சி. றிஸ்வான், சம்மாந்துறை நீதிமன்ற நீதவான் ரி.கருணாகரன், அக்கரைப்பற்று மேலதிக மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி ரி. றஜீவன், கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.எஸ்.எம்.சம்சுதீன், மட்டக்களப்பு தொழில் நியாயாதிக்க நீதிமன்றத்தின் தலைவர் நீதிபதி வி.எம்.சியான், கல்முனை மேல் நீதிமன்ற முன்னாள் ஆணையாளர் எம்.எஸ்.எம்.ஜெமீல், சிரேஷ்ட சட்டத்தரணி இஸ்மாயில் பி மாரிப், பதில் நீதிவான் சட்டத்தரணி ஏ.எம்.பதுறுத்தீன், சிரேஷ்ட சட்டத்தரணி எப்.எம்.அமீருல் அன்சார் மௌலானா, ஏ.ஆர்.எம். கலீல், எம்.எம்.முபீத் ஆகியோர் உரையாற்றினர். கனடாவில் வசிக்கும் நீதிவான் ஏ.எச்.எம்.ஹம்ஸாவின் செய்தியை சட்டத்தரணி ஜாவிட் ஜெமீல் வாசித்தார். லண்டனில் வசிக்கும் சட்டத்தரணி அபுல்கலாமின் செய்தியைச் சட்டத்தரணி எம்.எம்.அப்துல் சுபாஹிர் வாசித்தார். இந்த நிகழ்வில் நீதிவான்கள், சிரேஷ்ட, கனிஷ்ட சட்டத்தரணிகள், ஓய்வு பெற்றுச் செல்லும் உயர் நீதிமன்ற நீதிபதி அப்துல் மனாப்பின் குடும்பத்தினர், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மன்னாரில் வெள்ள அபாயத்தில் கிராமங்கள்: அனர்த்த முகாமைப் பிரிவு எச்சரிக்கை விடுப்பு!

(மன்னார எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டத்தில் அருவியாற்றை அண்டிய பல கிராமங்களில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும் அங்குள்ள குடும்பங்கள் இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்கு செல்வதற்கு தயாராக இருக்குமாறும் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.



மன்னார் மாவட்டத்தில் நேற்று (20) தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக முக்கியமான பெரிய குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இதனால் மல்வத்து ஓயா எனப்படும் அருவியாற்றை அண்டிய பகுதிகளாக உள்ள நானாட்டான் மற்றும் மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பல கிராமங்களுக்கு அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

மடுக்கரை, இராசமடு, அச்சங்குளம் போன்ற கிராமத்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்வதற்கு தயாராக இருக்குமாறு அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது அருவி ஆற்றில் 13.2 அடி நீர் வரத்து உள்ளது. இந்த நீர்வரத்துக்கு அதிகமானால் மக்கள் கட்டாயம் இடம் பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்று மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரி வித்துள்ளது.

அத்துடன் மக்கள் இடம்பெயரும் நிலை ஏற்பட்டால் நானாட்டான் டிலாசால் கல்லூரி மற்றும் மோட்டக்கடை சிவராஜா வித்தியாலயங்களில் தங்குவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று நானாட்டான் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

அருவி ஆற்றில் நீர்வரத்து அதிகமாகி வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளதால் அருவி ஆற்றில் மீன்பிடியில் ஈடுபடும் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# மதுபானசாலை வேண்டாம்: கல்முனையில் ஆர்ப்பாட்டம்!

**( வி.ரி. சகாதேவராஜா)**

கல்முனை பெரிய நீலாவணையில் மற்றுமொரு மதுபானசாலை வேண்டாம் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் விளக்குமாற்றுடன் இன்று (21) செவ்வாய்க்கிழமை ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கல்முனை வடக்கு பிரதேச செயலக முன்றலில் பெரிய நீலாவணை மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள். ஆர்ப்பாட்டக்காரர்கள் விளக்குமாறு மற்றும் பதாதைகளுடன் காணப்பட்டனர்.

கடந்த பத்தாம் மாதம் இரண்டாவது மதுபானசாலை திறக்கப்பட்டதும் ஆர்ப்பாட்டம் நடத்திய பொழுது அதனை மூடினார்கள். ஆனால் இப்பொழுது மீண்டும் திறப்பதற்கு ஏற்பாடு நடைபெறுகிறது.

எங்களுக்கு இந்த மதுபானசாலை வேண்டாம் என்றும் இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுங்கள் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கேட்டுக் கொண்டனர்.

இதன்போது மகஜர் ஒன்றும் பிரதேச செயலாளரிடம் வழங்கப்பட்டது.



# மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்கில் இன்று மக்கள் தினம்!

**(எஸ்.கீதபொன்கலன்)**

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகர பொது மக்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வுச் செயல்முறையை விரைவுபடுத்தும் நோக்கில், திரு கோணமலை மாவட்டச் செயலகத்தில் இன்று (21) மக்கள் தினத்தை நடத்தினார்.

இந்த நிகழ்வில், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்க, திருகோணமலை மாவட்டச் செயலாளர் டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமார, கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஜே.எஸ். அருள்ராஜ், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைச் செயலாளர்கள் மற்றும் பிற பொறுப்பான நிறுவனங்களின் தலைவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

பொது மக்கள் தங்கள் பிரச்சினைகளைப் பொறுப்பான



அதிகாரிகளிடம் தெரிவிக்க வாய்ப்பு வழங்கப்பட்ட அதே வேளை ஆளுநர், பிரதம செயலாளர் மற்றும் மாவட்டச் செயலாளர் ஆகியோரிடமும் தங்கள் பிரச்சினைகளை முன்வைக்க வாய்ப்பு வழங்கப்பட்டது.




# கட்சி தொடங்கி ஓராண்டாக பரந்தூருக்கு நடிகர் விஜய் ஏன் செல்லவில்லை?

## அண்ணாமலை கேள்வி

நடிகர் விஜய் மக்களை சந்தித்தது அரசியலா அல்லது ஆக்கப்பூர்வமான அணுகுமுறையா, கட்சி தொடங்கி ஓராண்டாக பரந்தூருக்கு விஜய் ஏன் செல்லவில்லை என்று பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை கேள்வி எழுப்பியுள்ளார்.

சென்னையில் பா.ஜ..க மாநில தலைவர் அண்ணாமலை செய்தியா ளர்களிடம் நேற்று கருத்து தெரிவிக் கையில்,

“சென்னை விமான நிலையம் வெறும் ஆயிரம் ஏக்கரில் மட்டுமே அமைந்துள்ளது. டில்லி, ஹைதராபாத் விமான நிலையங்கள் 5 ஆயிரம் ஏக்கரிலும், பெங்களூரில் 4 ஆயிரம் ஏக்கரிலும் விமான நிலையம் அமைந் துள்ளது. சென்னை வளர்ச்சி அடைந்து வருவதால், ஆயிரம் ஏக்கரை வைத் துக் கொண்டு விமான நிலையத்தை எப்படி நடத்த முடியும். சென்னை விமான நிலையம் ஆண்டுக்கு இரண் டரை கோடி பயணிகளை கையாளு கிறது. இதுவே அடுத்த 10 ஆண்டுக ளில், ஆண்டுக்கு 10 கோடி பயணிகள் என்ற நிலை உருவாகும். எனவே, சென்னைக்கு புதிய விமான நிலையம் வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

தமிழகத்தில் விமான நிலையம் அமைவதற்கான இடத்தை மாநில அரசுதான் தேர்வு செய்கிறது. 2019 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில், விமான நிலையம் அமைவதற்காக இடத்தை தேர்வு செய்து, மத்திய அர சுக்கு அனுப்பிய பட்டியலில் பரந்தூ ரும், மாமண்டூரும் இடம்பெற்றிருக் கிறது. 2021 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு, மாமண்டூரை நீக்கிவிட்டு பரந்தூர், பண்ணூரை தேர்வு செய்து மத்திய அரசுக்கு அனுப்பியது.

இதில் மத்திய அரசு பல ஆய்வுகள் நடத்திய பிறகுதான், மாநில அரசு அனுப்பிய பட்டியலில் இருந்து பரந் தூரை தேர்வு செய்தது. அ.தி.மு.க, தி.மு.க. ஆகிய இரண்டு அரசுகளும் அனுப்பிய பட்டியலில் பரந்தூர் இடம் பெற்றிருந்தது. இடத்தை தேர்வு செய் ததில் மத்திய அரசுக்கு ஒரு சதவீதம் கூட பங்கு கிடையாது. சென்னை அருகில் விமான நிலையம் வேண்டும் என்பதை விஜய் புரிந்து கொள்ள வேண்டும். அதை எங்கு கட்ட வேண் டும் என்பதை தேர்வு செய்து கொடுக்க வேண்டிய பொறுப்பு மாநில அரசி னுடையது.

சென்னைக்கு அருகில் விமான நிலையம் வேண்டாம் என்கிறாரா விஜய், விமான நிலையம் வேண்டும் என்றால், எந்த இடத்தை தேர்வு செய்து அவர் கொடுப்பார், ஏனென் றால், பரந்தூரில் மக்களை சந்தித்த விஜய், விமான நிலையம் வேறு எங்கு கட்ட வேண்டும் என்ற தீர்வை யும் கொடுத்திருக்க வேண்டும். டங்ஸ் டன் பிரச்சினை வேறு, விமான நிலைய பிரச்சினை வேறு. எனவே, பிரச்சினைகளை ஆக்கப்பூர்வமாக கையாண்டு தீர்வு கொடுப்பவர்கள்தான் நல்ல அரசியல்வாதியாக வருவார்கள்.

எரிகிற நெருப்பில் விஜய் எண் ணெய் ஊற்றப் போகிறாரா அல்லது எரிகிற நெருப்பை அனைத்துவிட்டு அதற்கான தீர்வை கொடுக்க போகி றாரா?

நடிகர் விஜய் கட்சி தொடங்கி ஒராண்டாகிறது. இந்த ஓராண்டாக பரந்தூர் பக்கம் விஜய் ஏன் செல்ல வில்லை. இவ்வளவு நாள்கள் என்ன செய்தார், விஜய் மக்களை சந்தித்தது அரசியலா அல்லது ஆக்கப்பூர்வமான அணுகுமுறையா, டங்ஸ்டன் விவகா ரத்தில் மத்திய அமைச்சர் கிஷன் ரெட்டியை ஜனவரி 22 ஆம் திகதி சந்தித்து அதற்கு நிரந்தர தீர்வை கொடுக்க இருக்கிறோம்.” - என்றார்.

# டொனால்ட் ட்ரம்பிற்கு பிரதமர் மோடி வாழ்த்து



அமெரிக்காவின் 47 ஆவது ஜனா திபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவி யேற்றுக்கொண்டுள்ளார்

இந்த நிலையில், ட்ரம்பிற்கு உலக தலைவர்கள் மற்றும் அரசியல் கட்சி தலைவர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் பிரதமர் மோடியும் டொனால்ட் ட்ரம்பிற்கு வாழ்த்து தெரி வித்துள்ளார்.

மோடி தனது வாழ்த்து செய்தியில், “உலகிற்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கு வெற்றிகரமான பதவிக்காலமாக அமைய வாழ்த் துக்கள். நெருங்கிய நண்பர் ட்ரம்ப் உடன் மீண்டும் ஒருமுறை நெருக் கமாக இணைந்து பணியாற்ற நான் எதிர்நோக்குகிறேன்.” என்று குறிப் பிட்டுள்ளார்.




# 78 நிர்வாக நடவடிக்கைகளை இரத்துச் செய்துள்ளார் ட்ரம்ப்!

அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் நேற்று இரவு பதவியேற்றுள்ளார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் இடம்பெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட ஜனநாயக கட்சியின் வேட்பாளர் கமலா ஹாரிஸை தோற்கடித்து டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டுவதற்கு தேவைப்படும் 270 தொகுதிகளை விடவும் அதிகமாக 312 தொகுதிகளில் குடியரசுக் கட்சியின் வேட்பாளரான டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றார்.

இதன் ஊடாக, டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்கும் இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இந்தநிலையில், அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்று உரையாற்றிய டொனால்ட் ட்ரம்ப், அமெரிக்க - மெக்சிகோ எல்லையில் தேசிய அவசரநிலையை அறிவிப்பதற்கும், போதைப்பொருள் கடத்தல்காரர்களைப் பயங்கரவாதிகளாக அறிவிப்பதற்கும் திட்டமிட்டுள்ளேன் எனவும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், டிரம்ப் பல உத்தரவுக ளில் கையெழுத்திட்டுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடன் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட 78 நிர்வாக நடவடிக்கைகளை இரத்துச் செய்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

# அமெரிக்காவில் ஆண் – பெண் என்ற இரு பாலினம் மட்டுமே அங்கீகாரம்

## ட்ரம்ப் அறிவிப்பு



அமெரிக்காவில் ஆண் - பெண் என்ற இரு பாலினம் மட்டுமே இனி அங்கீகரிக்கப்படும் என அந்நாட்டின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

நேற்றைய தினம் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றுக்கொண்ட டொனால்ட் ட்ரம்ப், நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது சிறார் பாலின மாற்று அறுவை சிகிச்சைக்குத் தடை விதிக்கத் தீர்மானித்துள்ளதாகவும், அத்துடன் இராணுவத்திலும் மாற்றுப் பாலினத்தவர்களை இணைப்பதற்குத் தடை விதிக்கத் தீர்மானித்துள்ளதாகவும், விரைவில் இது தொடர்பான உத்தரவுகளில் கையெழுத்திடவுள்ளதாகவும் டொனால்ட் ட்ரம்ப் தனது முதல் உரையில் தெரிவித்துள்ளார்.

அத்துடன், எல்லை விவகாரம், இயற்கைப் பேரிடர்கள், வெளிநாட்டு கொள்கைகள் எனப் பலவற்றிலும் பைடன் அரசு தோல்வியடைந்து விட்டதாக குற்றம்சாட்டிய ட்ரம்ப் , அமெரிக்கர்களின் நலனுக்காக வெளிநாடுகள் மீது மேலும் கூடுதல் வரி விதிக்கப்படும் என்றும் அமெரிக்காவுக்கு முன்னுரிமை என்ற கொள்கையை தனது நிர்வாகம் உறுதியாக பின்பற்றும் என்றும் உறுதியளித்துள்ளார்.

# தாய்வானில் நிலநடுக்கம்!



தாய்வானில் இன்று அதிகாலை 12.17 மணியளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கமொன்று ஏற்பட்டுள்ளது. அந்நாட்டின் யுஜிங் நகரில் இருந்து வடக்கே 12 கிலோ மீற்றர் தொலைவில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலநடுக்கமானது ரிச்டர் அளவுகோலில் 6.0 ஆக பதிவாகியுள்ளதாகவும், இதன் காரணமாக அப்பகுதியில் உள்ள கட்டடங்கள் அதிர்ந்துள்ளதாகவும் இதனைத் தொடர்ந்து மக்கள் அலறியடித்துக்கொண்டு வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த நிலநடுக்கத்தினால் 15 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் எனினும் உயிரிழப்பு சம்பவங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பக்கங்கள் 03

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 21/01/2025

## மிஸிசாகாவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கனடாவின் மிசிசாகாவில் இடம் பெற்ற வாகன விபத்தில் நபர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

தனி ஒரு வாகனம் இவ்வாறு விபத்துக்குள்ளானதாக 03







# கிறிஸ்டியா ப்ரிலாண்ட்டின் பிரசாரத்துக்கு இடையூறு

**கனடிய லிபரல் கட்சியின் தலைமைப் பதவிக்காக போட்டியிடும் கிறிஸ்டியா ப்ரிலாண்ட்டின் பிரசார நடவடிக்கைக்கு இடையூறு விளைவிக்கப்பட்டுள்ளது.**

**ப்ரிலாண்ட் அதிகாரபூர்வமாக தனது பிரசாரத்தை ஆரம்பித்த போது இவ்வாறு இடையூறு விளைவிக்கப்பட்டுள்ளது.**

**அவர் மேடையில் உரையாற்றிக் கொண்டிருந்த போது அதனை பார்வையிட்ட சிலர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.**

பிரசார உரையின் போது கிறிஸ்டியாவிற்கு பல தடவைகள் தனது உரையை மீளவும் தொடங்க நேரிட்டுள்ளது.

இந்த தேசத்தை தாம் நேசிப்பதாகவும் யாருடனும் முரண்பட தாம் முயற்சிக்கவில்லை எனவும் ப்ரீலாண்ட் தெரிவித்துள்ளார்.

தலைமைத்துவ பதவியில் வெற்றி பெற்றாலும் தோற்றாலும் அடுத்த தேர்தலில் போட்டியிடத் திட்டமிட்டுள்ளதாக ப்ரிலாண்ட் தெரிவித்துள்ளார்.

# கனடா பிரதமர் பதவி போட்டியில் இந்திய வம்சாவளி சந்திரா ஆர்யா

கனடா பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோ தனது பதவியை இராஜினாமா செய்துள்ள நிலையில், அடுத்த பிரதமர் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்நிலையில், இந்திய வம்சாவளியினரான நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், பிரதமர் பதவியில் போட்டியிடுவதற்காக வேட்பு மனு தாக்கல் செய்துள்ளார்.

பிரதமர் பதவியில் போட்டியிடுவதற்காக வேட்பு மனு தாக்கல் செய்துள்ள அந்த இந்திய வம்சாவளி நாடாளுமன்ற உறுப்பினரின் பெயர், சந்திரா ஆர்யா.

சந்திரா ஆர்யா, இந்தியாவின் கர்நாடக மாநிலத்திலுள்ள தும்கூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஆவார். அவர், தார்வாடு என்னுமிடத்திலுள்ள கர்நாடகா பல்கலையில் முதுகலை வணிக மேலாண்மை பயின்றவர்.

அதற்குப் பிறகு கனடா வந்த சந்திரா ஆர்யா, 2015 ஆம் ஆண்டு முதல் நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார்.

சமூக ஊடகமான எக்ஸில் ஆர்யா வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், தான் கனடாவின் பிரதமர் பதவிக்காக போட்டியிடுவதாக தெரிவித்துள்ளார்.






# பேக்கரி உற்பத்தி தொடர்பில் எச்சரிக்கை; 17 பேர் வைத்தியசாலையில் அனுமதி

கனடாவில் சில பேக்கரி உற்பத்திகள் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சுவீட் கிறீம் (Sweet Cream brand) பண்டக் குறியைக் கொண்ட பேக்கரி உற்பத்திகள் தொடர்பில் இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி பேக்கரி உற்பத்திகளில் சல்மொன்லா பக்றீரியா தாக்கம் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடிய உணவு பரிசோதனை முகவர் நிறுவனம் இந்த எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வகை பேக்கரி உற்பத்திகளை நுகர வேண்டாம் என நுகர்வோருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், இந்த வகை உற்பத்திகளை சந்தையிலிருந்து மீளப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

பெரி டார்ட், இக்லெயர்ஸ், கேக் மற்றும் கனொல்லி போன்ற உணவுப் பண்டங்களில் பக்றிரீயா தாக்கம் ஏற்பட்டிருக்கலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த உணவுப் பண்டங்களை உட்கொண்ட 17 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

# ஸ்காப்ரோ பகுதியில் இடம்பெற்ற மோதலில் கத்திக்குத்துக்கு இலக்காகி ஒருவர் காயம்




கனடாவின் ஸ்காப்ரோ பகுதியில் இடம்பெற்ற கத்திக்குத்து தாக்குதல் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

குடும்ப உறுப்பினர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் ஒன்றின் விளைவாக இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோதல் சம்பவத்தை தொடர்ந்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

வார்டன் மற்றும் டான்ஸ் ஃபோர்த் வீதிகளுக்கு அருகாமையில் இந்த கத்திக்குத்து தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

இந்த கத்திக்குத்து தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்தவருக்கு உயிர் ஆபத்து கிடையாது என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இந்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில், ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபருக்கும் கத்திக்குத்துக்கு இலக்கானவருக்கும் இடையிலான உறவு தொடர்பில் எவ்வித தகவல்களும் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

சம்பவம் தொடர்பில் டொரன்டோ பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# வாகனம் ஒன்று நீர் நிலையில் மூழ்கி விபத்துக்குள்ளானதில் பெண் பலி

கனடாவில் வாகனம் ஒன்று நீர் நிலையில் மூழ்கி விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.

டொரன்டோவின் அஸ் பிரிட்ஜஸ் விரிகுடா பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வாகனம் ஒன்று நீரில் மூழ்கியமை தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் கிடைக்கப்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்து நீரில் மூழ்கியவர்களை மீட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்கள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் டொரன்டோ பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.




## மிஸிசாகாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகிறது.

பிக்சி மற்றும் டெறி வீதிகளுக்கு அருகாமையில் இந்த வாகன விபத்து இடம் பெற்றுள்ளது.

சுமார் 20 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவரே இவ்வாறு சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் அறிந்து கொண்ட உயிர் காப்பு பணியாளர்கள் விபத்துக்குள்ளானவருக்கு முதலுதவி வழங்கியுள்ளனர்.

முதலுதவிகள் மூலம் விபத்துக்குள்ளானவரை காப்பாற்ற முடியவில்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த வாகன விபத்து சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சம்பவத்தில் உயிரிழந்த நபரின் ஆள் அடையாள விபரங்களோ, விபத்துக்கான காரணங்கள் குறித்தும் தகவல்கள்எதுவும்வெளியிடப்படவில்லை.



